# சிவகங்கை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

( 08-12-2016 – 12-12-2016 )

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 07-12-2016

கடந்த கால வானிலை 02-12-2016 முதல் 06-12-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 55.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 26-32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 19-24 |
| மேக மூட்டம் | 3-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 55-91 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 0-50 |

எதிர்பார்க்கப்படும் வானிலை 12-12-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 08.12.16 | 09.12.16 | 10.12.16 | 11.12.16 | 12.12.16 |
|---|---|---|---|---|---|
| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 5 | 5 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

**குறுஞ்செய்தி:**

அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்வதற்கான வாய்ப்பு இல்லை. லேசான மேகமூட்டத்துடன் கூடிய குளிர்ந்த வானிலையே நிலவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் பருத்தி**

- தற்போது நிலவும் மழை மற்றும் பனி மூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இதனை கட்டுபடுத்த தாவர பூச்சிகொல்லியான அசாடிரக்டீன் 0.03 சதக் கரைசலை ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்கலாம்.
- தற்போது நிலவும் குளிர்ந்த வானிலையின் காரணமாக பருத்தி செடியில் காணப்படும் சாறு உறிஞ்சும் பூச்சியின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 என்ற அளவில் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். தேவைப்படின் இமிடாகுளோபிரிட் 200 எஸ்.எல். ஒரு ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்கவும்.
- மிதமான மழையின் காரணமாக மண்ணில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு உரம் மற்றும் நுண்ணூட்டங்களை வைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளலாம்
- மழைகாலங்களில் தங்களது கால்நடைகளை கோமாரிநோய் தாக்குதல் ஏற்படும் மேலும் சப்பைநோய், தொண்டைஅடைப்பான் நோய் ,குடற்புழுக்கள் மற்றும் உருண்டைபுழுக்கள் தாக்குதல் காணப்படும் இதன் காரணமாக மாடுகள், கன்றுகளில் கழிச்சல், வயிற்றுப்போக்கு ஏற்படும், இதனைத்தடுக்க மருத்துவரின் ஆலோசனையின் பேரில் 3 மற்றும் 6 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழுநீக்கம் செய்யவேண்டும்.